**செ.வெ.எண்: 23** **நாள்:07.09.2021**

**நாமக்கல் மாவட்டம்**

**பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் இணையதளம் வாயிலாக நடத்தப்பட்ட கொரோனா நோய்த்தொற்று தடுப்பு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற 58 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசு கேடயங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

-----

கொரோனா எனும் பெருந்தொற்று நோய் உலக நாடுகள் அனைத்தையும் அச்சுறுத்தி கொண்டிருந்தபோது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிக இலாவகமாக கையாண்டு நோய்த்தொற்றின் தாக்கத்தினை குறைத்து, பொது மக்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைகிணங்க, நாமக்கல் மாவட்டத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில், கொரோனா நோய்த்தொற்று தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, பல்வேறு துறைகளின் மூலம் ஆகஸ்ட் 1-ந்தேதி முதல் 7-ந்தேதி வரை கொரோனா நோய்த்தொற்று தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அந்த வகையில் ஆகஸ்ட் 5-ந்தேதி மற்றும் 6 –ந்தேதி ஆம் தேதிகளில் பள்ளிக்கல்வித்துறையின் மூலம் மாணவ, மாணவியர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளை சேர்ந்த 1 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பங்கு பெறும் வகையில் இணையதளம் வழியாக சுவரொட்டி வடிவமைப்பு, ஓவியப்போட்டி, முழக்கத்தொடர், வினாடி வினா, நகைப்படம் உருவாக்கம், நகைச்சுவை கட்டுரை போட்டி மற்றும் என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் 4,230 மாணவ, மாணவியர்கள் ஆன்லைன் மூலமாக கலந்து கொண்டனர்.

**நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் இணையதளம் வாயிலாக (ஆகஸ்ட் 5 –ந்தேதி மற்றும் 6-ஆம் தேதிகளில்) நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு முதல் 3 இடங்களை பெற்று வெற்றி பெற்ற 58 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசு கேடயங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.**

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திரு.அ.பாலுமுத்து, துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.பிரபாகரன், பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.